# கிருஷ்ண கான சபாவும், நானும்

லால்குடி ஜெயராமன்

பொன்விழா ஆண்டைக் கோலாகலமாக கொண்டாடுகிறது கிருஷ்ண கான சபா.

மகிழ்ச்சிகரமான இந்த சந்தர்ப்பத்தில் கிருஷ்ண கான சபாவுடன் கடந்த ஐம்பது வருடங்களாக எனக்கு இருந்து வரும் தொடர்பை நினைத்துப் பெருமிதம் அடைகிறேன்.

இந்த சபாவும் நானும் ஒன்றாக வளர்ந்து வந்தோம் என்று நினைக்கும்போது என் மனம் பூரிப்படைகிறது. இந்த கலை உறவை விவரிப்பதற்கு முன் சபாவைப் பற்றி சில வார்த்தைகள் கூறுவது என் கடமை.

சங்கீதம், நாட்டியம், நாடகம், நாமசங்கீர்த்தனம், ஹரிகதை போன்ற கலைகளுக்கு ஆதரவு அளிப்பதில் தனி இடம் வகிக்கிறது கிருஷ்ண கான சபா. வாழையடி வாழையாக கலை மேலும் வளர ஓர் இசை, நடனப் பள்ளியையும் நடத்தி வருகிறது.

'சங்கீத சூடாமணி', 'நிருத்ய சூடாமணி', 'நாடக சூடாமணி', 'ஆச்சார்ய சூடாமணி' போன்ற பெருமை சேர்க்கும் விருதுகளை தகுதி வாய்ந்த கலைஞர்களுக்கு வழங்கி வருகிறது.

ஒடிசி, கதக், குச்சிபுடி என்று எல்லாவித சம்பிரதாயமான நாட்டியத்துக்கும் இடமளித்து வருகிறது. ஒவ்வொரு வருடமும் கோகுலாஷ்டமி இசை விழாவும், டிசம்பரில் இசை, நாட்டிய விழாவும், பொங்கல் சமயத்தில் நாகஸ்வர விழாவும், ஏப்ரலில் நாடக விழாவும் நடத்தி நிஜமாகவே கலைச் சேவை புரிந்துவருகிறது கிருஷ்ண கான சபா.

இத்தனை விழாக்களுக்கும் பட்டியல் போட்டு, இம்மி பிசகாமல் நிகழ்ச்சி நிரல் தயார் செய்து ரசிகர்களுக்கு கலை விருந்து படைப்பது யக்ஞராமன் அவர்களின் தனிப்பட்ட முயற்சி. மேலும், நிகழ்ச்சிகளை எந்தவித குறைபாடும் இல்லாமல் வெற்றிகரமாக அமைத்துக் கொடுப்பது யக்ஞராமனுக்கு கைவந்த கலை!

பல கலைஞர்கள் தலைமுறை தலைமுறையாக இந்த சபாவில் பங்கேற்பதுடன், இசை ரசிகர்களும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்துகொண்டிருப்பது சபாவுக்குத் தனிப் பெருமை.

என் நினைவலைகள் பின்னோக்கிச் செல்கின்றன...

அரியக்குடி, மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், செம்பை, ஜி.என்.பி., மதுரை மணி ஐயர், ஆலத்தூர் சகோதரர்கள், டி.கே. ரங்காச்சாரி, மதுரை சோமு, எஸ். பாலசந்தர், தஞ்சாவூர் கல்யாணராமன், எம்.டி. ராமநாதன், டி.விஸ்வநாதன், டி.கே. ஜெயராமன், மகாராஜபுரம் சந்தானம், வொலட்டி வெங்கடேஸ்வரலு, கே.வி. நாராயணசாமி போன்ற மறைந்த மாமேதைகளுக்கும், இன்று பிரபலமாக விளங்கும் கலைஞர்களான டி.எம்.தியாகராஜன், தஞ்சாவூர் சங்கர ஐயர், எம். பாலமுரளி கிருஷ்ணா, நேதநூரி கிருஷ்ணமூர்த்தி, டி.ஆர்.எஸ்., டி.வி. சங்கரநாராயணன், டி.என். சேஷகோபாலன், திருச்சூர் வி. ராமச்சந்திரன், பி.எஸ். நாராயணசாமி, ஓ.எஸ். தியாகராஜன் வரை இந்த சபாவில் வாசித்திருக்கிறேன். அதேபோல் இன்று கொடிகட்டிப் பறக்கும் மிருதங்க வித்வான்கள் அனைவருடனும் இணைந்து வாசித்திருக்கிறேன்.

கிருஷ்ண கான சபாவில் - அப்போது சபா இயங்கி வந்த சுகன் விஹார் கலையரங்கில் 30.7.1961 அன்று என் சகோதரி ஸ்ரீமதி பிரும்மானந்தத்துடன் இரு வயலின் வாசிக்குமாறு எனக்கு அழைப்பு வந்தது. அன்று ஸ்பெஷலாக பழநி சுப்ரமணிய பிள்ளை அவர்களும் திருச்சி சங்கரனும் டபுள் மிருதங்கம் வாசித்தார்கள். இதற்குப் பிறகு சபா சொந்த இடத்துக்கு குடிபுகுந்த பின் ஒவ்வொரு வருடமும் இரு முறை ஸோலோ கச்சேரி செய்யும்படி என்னை அன்போடு அழைப்பது வழக்கமாயிற்று.

அது மட்டுமா? பல பாடகர்களுக்கும், வாத்தியக் கலைஞர்களுக்கும் என்னுடைய பக்கவாத்தியத்தை ஏற்பாடு செய்து ஆண்டுதோறும் ஐந்து அல்லது ஆறு கச்சேரிகளுக்கு என்னை அழைத்திருக்கிறார் யக்ஞராமன். ஒரு சில வருடங்களில் ஏழெட்டு முறைகூட எனக்கு அழைப்பு வரும். மறக்க முடியாத நாட்கள் அவை.

வயலின் - வேணு - வீணா என்று மூன்று வாத்தியங்களை இணைத்து ஒரே மேடையில் கச்சேரி செய்யத் தீர்மானித்தோம். ஒரு கலைஞரின் எந்த ஒரு புது முயற்சிக்கும் சபாக்களும் ரசிகர்களும் ஆதரவு தந்தால்தான் அவருடைய முயற்சிக்கு வெற்றி கிட்டும்.

அந்த நாட்களில் இந்த மாதிரி காம்பினேஷன் கிடையாது. வெவ்வேறு ஸ்தாயிகளிலுள்ள நாத வேற்றுமை நிரம்பிய வீணை - வயலின் - புல்லாங்குழலை சேர்ந்திசைக்க என் மனம் விரும்பியது. அதன் விளைவே இந்த வயலின் - வேணு - வீணா முயற்சி.

என் ரமணி (வேணு), வெங்கட்ராமன் (வீணா) இருவருடன் இணைந்து முதன் முதலாக மேடையேறியது கிருஷ்ண கான சபாவில்தான்.

இந்த புது முயற்சியைப் பற்றி கேள்விப்பட்டவுடன், 'நம் சபாவில்தான் மேடையேற வேண்டும்' என்றார் யக்ஞராமன். 10.7.1966 அன்று முதல் முறையாக வாசித்தோம். ரசிகர்களிடம் இது நல்ல வரவேற்பைப் பெற்றது. அதே வருடம் 23.12.1966 அன்று மீண்டும் இதே சபாவில் வாசித்தோம்.

இன்னொரு முக்கிய சம்பவத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும். பாலக்காடு மணி ஐயர் சில காலம் 'மைக்லெஸ்' கச்சேரிகளை வற்புறுத்தி வந்தார். அவருடன் இணைந்து இந்த மாதிரி மைக் இல்லாமல் கிருஷ்ண கான சபாவில் நான் ஸோலோ வாசித்திருக்கிறேன். ஆலத்தூர் ஸ்ரீனிவாச ஐயருக்கும் அதேபோல் மைக் இல்லாமல் வாசித்திருக்கிறேன். கிருஷ்ண கான சபா அரங்கின் கடைசி வரிசை வரையில் மைக் இல்லாமலேயே நாதம் மிகத் துல்லியமாகக் கேட்டது.

எங்கள் குடும்பத்தில் அடுத்த தலைமுறையினரான ஜி.ஜே.ஆர். கிருஷ்ணனும் விஜய லட்சுமியும் அரங்கேறியது ராசியான கிருஷ்ண கான சபாவில்தான். கிருஷ்ணனின் முதல் கச்சேரியின்போது என் தந்தையாரும் வந்திருந்து ஆசீர்வதித்தார். மூன்று தலைமுறையினர் ஒருங்கே கூடியிருந்த இந்த அரிய சந்தர்ப்பத்தில் முதலில் என் தந்தையாரையும், பிறகு எங்களையும் மாலை அணிவித்துக் கௌரவித்தார் யக்ஞராமன். அதேபோல் என் தந்தையாரின் நூற்றாண்டு விழாவையும் விமரிசையாகக் கொண்டாடியது கிருஷ்ண கான சபா அரங்கில்தான்.

இந்த சபாவில்தான் இசை பற்றிய பல சொற்பொழிவுகள் நான் செய்திருக்கிறேன். அம்ஜத் அலிகான் சரோடுடன் ஜுகல்பந்தி நிகழ்ச்சி நடத்தியதும் இந்த சபாவில்தான்.

காஞ்சி ஆச்சார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைபடி திருவாரூரில் மும்மூர்த்திகள் அவதரித்த இல்லங்களைப் புதுப்பிக்கும் பணியில் எனக்கு உறுதுணையாக இருந்தார் யக்ஞராமன். பதினெட்டு ஆண்டுகள் அங்கு நடத்திவந்த இசை விழாவுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பணியையும் யக்ஞராமன் மிக சீரிய முறையில் செய்து வந்தார்.

வருடா வருடம் கோகுலாஷ்டமி இசை விழாவிலும், டிசம்பர் இசை விழாவிலும் தவறாமல் என்னுடைய ஸோலோ கச்சேரிகள் நடைபெற்று ஐம்பது ஸோலோக்கள் பூர்த்தி ஆனதும் என்னைக் கௌரவித்து வெள்ளி வயலின் பரிசளித்தது என்னுடைய இசைப் பயணத்தில் ஒரு மகுடம் வைத்தது போல் அமைந்த ஒரு நெகிழவைக்கும் சம்பவம்.

கிருஷ்ண கான சபாவில் நான் வாசித்தேன். என் சகோதர்கள் வாசித்திருக்கிறார்கள். என்னுடைய வாரிசுகள் வாசித்து வருகிறார்கள். இன்று என் சிஷ்யர்களும் வாசித்தும், பாடியும் வருகிறார்கள். யக்ஞராமனின் ராசியான மோதிர விரலால் குட்டுப்பட்டு வரும் என் சிஷ்யர்கள் நிஜமாகவே கொடுத்து வைத்தவர்கள் தான்!

கிருஷ்ண கான சபாவுடன் பின்னிப் பிணைந்துவிட்டிருப்பவர் யக்ஞராமன். சபாவுக்காக தன் வாழ்நாளையே அர்பணித்துக்கொண்டிருப்பவர். அவருடன் இணைந்து அவர் குடும்பத்தினரும் சபாவின் முன்னாள் தலைவர்களும், நிர்வாக அங்கத்தினர்களும் கடந்த ஐம்பது வருடங்களாக குறையின்றி சபாவை நடத்தி வருகிறார்கள்.

சபாவின் இன்றைய தலைவர் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களின் நல்லாதரவுடனும் வழிக்காட்டுதலுடனும் அரங்கமே புதுக்கலையுடன் பிரகாசித்து வருவது பாராட்டுக்குரியது.

கிருஷ்ண கான சபாவை நினைத்தவுடன் மறக்க இயலாத பல கச்சேரிகளும், கலைஞர்களும், ரசிகர்களின் எதிர்பார்ப்பும் ஆமோதிப்பும் என் இசைப் பயண மைல் கற்களும் என் மனத்திரையில் பளிச்சிடுகின்றன.

பல்வேறு துறைகளில் கலைத்தொண்டு புரிந்துவரும் கிருஷ்ண கான சபா ஐம்பது ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக நிமிர்ந்து நிற்பதைப் பார்க்கும்போது பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

இனி வரும் ஆண்டுகளிலும் கலைக்கும் மனிதமேம்பாட்டுக்கும் இவ்வண்ணமே சேவை செய்து எல்லோருக்கும் வளத்தையும் நலத்தையும் கிருஷ்ண கான சபா மூலம் அளிக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.